[1979 நவம்பர் 2

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதல் கேள்விக்கு அப்படித் தகவல் இல்லை. இரண்டாவது கேள்விக்கு—27 லட்சம் ரூபாய் செலவில் சிறுமுகைக்குக் குடிதண்ணீர் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இத்திட்ட வேலைகளில் சிறுமுகைக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய் பவானி ஆற்றின் குறுக்கே பதிக்க வேண்டிய பகுதி நீங்கலாக அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. பவானி ஆற்றுப் பாலம் கட்டுமானப் பணி பெருவழித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அது முடிவுற்றதும் சிறுமுகைக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய் பதிக்கும் பணி விரைந்து முடிக்கப்படும்.

கொல்லம்-தூத்துக்குடி விரைவுப் பேருந்துகள்

* **வினா எண். 71—திரு. பொ. சிகாமணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேரள மாநிலத்திலுள்ள கொல்லத்திற்கும் தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடிக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உடனடியாக பஸ்கள் விடப்படும் என்று சொன்னதை நன்றியோடு வரவேற்கிறேன். எத்தனை எண்ணிக்கையில் பஸ்கள் விடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, வினாவில் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா என்று கேட்கப்பட்டுள்ளது. முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 16 வழித் தடங்களில் பேருந்துகள் விடப்படவேண்டுமென்ற அடிப்படையில் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அனுமதி பெறப்பட்டு இருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையே ஓடுகின்ற இண்டர்-ஸ்டேட் பஸ்களின் எண்ணிக்கை கேரள மாநிலத்திலே ஓடுகின்ற தமிழ்நாட்டு பஸ்களைவிட அதிகமாக தமிழ் நாட்டிலே ஓடுகின்ற கேரள மாநில பஸ்களில் எண்ணிக்கை இருக்கிறது; குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லை ஓரப் பகுதிகளிலே தமிழ்

1979 நவம்பர் 2]

நாட்டு பஸ்களில் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற ஏற்பாடுகளை மறுபரிசீலனை செய்து அதிகமான தமிழ் நாட்டு பஸ்களை கேரள மாநிலத்திலே விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற குறைபாடு கடந்த காலத்திலே ஏற்பட்ட குறைபாடு. அதை களைவதற்காக தமிழ்நாட்டிலே எத்தனை மைல்களுக்கு கேரள மாநில பஸ்கள் ஓடுகின்றனவோ அதைப்போல் கேரள மாநிலத்திலேயும் தமிழ்நாட்டு பஸ்கள் ஓடவேண்டுமென்ற முறையிலே பேச்சு வார்த்தை நடந்து உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 16 வழித்தடங்களில் பஸ்களை விட இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு இப்போது ஏ.சி.பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் டெல்லி சர்க்காரி லிருந்து விடப்படுகிற கொல்லம் எக்ஸ்பிரஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டில் எத்தனையோ வழித் தடங்கள் இருக்கின்றன. எல்லாவற்றைப்பற்றியும் இதிலே கேட்க முடியாது. உட்காருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, கேரள அரசோடு ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அந்த 16 வழித்தடங்கள் என்ன என்ன என்று சொன்னால் அந்த அந்த வழித் தடங்கள் உருவாவதில் உறுப்பினர்கள் யோசனை சொல்ல வசதியாக இருக்கும், ஆகவே அதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்த 16 வழித்தடங்கள் பற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மதுரை மாவட்டம் கோவை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் கேரள அரசு பேருந்துகள் ஒட்டு மொத்தமாக 45 வழித்தடங்களில் விடப்படவேண்டுமென்று ஏற்கனவே கோரினோம். அந்த அடிப்படையில் 16 வழித்தடங்களுக்கு இப்போது உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. மேலும் முயற்சி செய்யலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்கின்ற எக்ஸ்பிரஸ் விருதுநகர் வழியாகச் செல்கிறது. அதைப்போலவே ஏ.சி. பஸ்ஸும் சிவகாசி ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜபாளையம் வழியாக விடுவதற்கு ஆலோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே சட்டமன்றத்திலே கூறியிருக்கிறேன். இன்னும் 8 ஏ. சி. (சினிமாக் காட்சிகள் காட்டப்படும்) பஸ்கள் விடப்பட இருக்கின்றன. அதிலே ஒரு பேருந்து இந்த வழித்தடத்திலே செல்ல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர்—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.

* **வினா எண். 72—திரு. கு. வடிவேல் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து விடும் உத்தேசம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போதிலிருந்து விடப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு பேருந்துவிடும் உத்தேசம் இல்லை என்று கூறினார்கள். பழனியிலிருந்து சென்னைக்கு குளு குளு பஸ் விடுவதாக சென்ற மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே பத்திரிகையிலே வந்தது. இதுவரையிலே வரவில்லை. என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குளு குளு ஏ. சி. பஸ்கள் கட்டுவதற்கு குறைந்தது 4 மாதங்கள் தேவைப்படுகிறது. அடுத்த மாதத்திலே வேலை முடிந்துவிடும். அடுத்த மாதத்திலே அந்தப் பேருந்து விடப்படும்.

கோயில் மலையனூர் அணைத் திட்டம்.

வினா எண். 73—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ப. சந்திரன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அணைக்கட்டுத் தொகுதியில் மேலாசம்பட்டுக்கு அருகில் கோயில் மலையனூர் அணைக் கட்டுத் திட்டம் கட்ட முடிவு செய்யப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆமெனில் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?